Registered as a Newspaper

89 A/L
CHEMISTRY
ஆசிரியர் : திரு. தில்லைநாதன்
(Sat, Sun)
9 30 – 10 30
அசேதன இரசாயனம்
12 30 – பிணைப்புகள்
ஆரம்பம்:
05-03-1988 Sat.
New Master
Institute
B.M.C LANE, JAFFNA.

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை
ரூ. 1-50

88 A/L
CHEMISTRY
ஆசிரியர்: திரு தில்லைநாதன்
PHYSICAL CHEMISTRY
(அவத்தைச் சமநிலை)
ஆரம்பம்: 05-03-88
Sat 07 15 08 15
New Master
INSTITUTE
241, Navalar Road,
JAFFNA.

சுடர்: 3 யாழ்ப்பாணம் பிரபவ ஆண்டு பங்குனி மீ 05 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1408 றஜபு பிறை 28 (18 - 03 - 1988) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:31

## கிழக்குச் சிங்கள மக்களுக்கு

# ஸ்ரீலங்கா இராணுவம் பாதுகாப்பு வழங்கும்

### ராஜீவ் - காமினி பேச்சின் விளைவு

புதுடில்லி, மார்ச் 18

கிழக்கு மாகாணத்தில் சிங்கள மக்களுக்கு ஸ்ரீலங்கா இராணுவம் பாதுகாப்பு வழங்க வழிசெய்யும் உடன்பாடு ஒன்று இந்திய-இலங்கை அரசுகளுக்கு இடையே ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

புதுடில்லியில் இருந்து நம்பிக்கையான வட்டாரங்கள் இதனைத் தெரிவித்தன.

கடந்த புதன்கிழமை மாலை பிரதமர் ராஜீவ் காந்தியை அமைச்சர் காமினி திஸநாயக்கா சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினர். அப்பேச்சுக்கள் ஒரு மணித்தியாலம் வரை நீடித்தது.

அதற்கு முன்னர் இந்திய ஸ்ரீலங்கா இராணுவ உயர் அதிகாரிகள் பேச்சுக்கள் நடத்தினர்.

திருமலை மாவட்டத்தில் சிங்களவர் அண்மையில் கொல்லப்பட்ட சம்பவங்கள் இப்பேச்சுக்களில் பிரதான இடம் வகித்தன.

அதைத் தொடர்ந்தே முன்கண்ட உடன்பாடு காணப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

இந்த உடன்பாட்டின் படி இலங்கை இராணுவம் சிங்கள மக்களைப் பாதுகாக்கும் தற்காப்பு இராணுவ நடவடிக்கைகளில் மட்டுமே ஈடுபடும் என்றும் கூறப்பட்டது.

இதேவேளை கிழக்கில் இந்திய இராணுவத்துக்கு உதவியாகவே இலங்கை இராணுவம் செயல்படும் என்றும் ஏஜன்சிச் செய்திகள் தெரிவித்தன.

(அ-ஒ-எ)

## ஆஸ்பத்திரி பொலீஸ்

### முறைப்பாட்டுப் பிரிவு இயங்கவில்லை

யாழ்ப்பாணம் மார்ச் 18

யாழ் ஆஸ்பத்திரி பொலீஸ் பிரிவில் உள்ள முறைப்பாட்டுப் பிரதிகளை ஏற்கும் பிரிவு கடந்த சில தினங்களாக இயங்கவில்லை.

இதனால் முறைப்பாடுகளை கொண்டுவரும் பொதுமக்கள் ஏமாற்றத்துடன் திரும்ப வேண்டி உள்ளனர்.

இதேவேளை முறைப்பாட்டுப் பிரதிகளை மீள ஒப்படைத்தலும் நடைபெறவில்லை.

யாழ். நகர் கடந்த சில தினங்களாக ஸ்தம்பித்திருப்பதன் காரணமாகவே இந்த அலுவலகப் பிரிவு இயங்கவில்லை என்று கூறப்படுகிறது.

(ஒ-10)

## 'கைஸ்' பாடசாலைகளில் நடக்கும்

### கையொப்ப இயக்கம் அடுத்த வாரமும் தொடரும்

யாழ்ப்பாணம், மார்ச் 18

பாடசாலை மாணவர்களின் கையொப்ப இயக்கம் தொடர்ந்து நடத்தப்படும்.

இவ்வாறு மாணவர் இளைஞர் பொது மன்றம் (கைஸ்) அறிவித்துள்ளது.

தடைப்பட்ட ஜீ.சி.ஈ. (சாதாரண தர) பரீட்சையை உடனடியாக நடத்தக் கோரியே இந்த இயக்கம் நடத்தப்படுகிறது.

யாழ் மாவட்டத்திலும், மற்றைய பகுதிகளிலும் இந்த இயக்கம் அடுத்த வாரத்திலும் நடத்தப்படும் என்றும் மாணவர் இளைஞர் மன்றம் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:–

கடந்த வருடம் டிசம்பர் மாதத்தில் நடைபெற வேண்டிய க.பொ.த. [சா/தர] பரீட்சைகள் நடைபெறவில்லை. இதனால் சுமார் ஐம்பதினாயிரத்திற்கும்மேற்பட்ட

(6 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். அன்னையரின் உண்ணாவிரதம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 18

யாழ் அன்னையர் முன்னணியினர் நாளை சனிக்கிழமை மேற்கொள்ள இருந்த மூன்று கட்ட உண்ணாவிரதம் கால வரையறை இன்றி பின் போடப்பட்டுள்ளது.

அன்னையர் முன்னணியின் தலைவி திருமதி. தேம்பா குணநாயகம் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

கடந்த இரண்டு தடவைகள் மேற்கொண்ட அடையாள உண்ணாவிரதங்களின்போது அன்னையர் முன்னணி முன்வைத்த கோரிக்கைகள் தொடர்பாக இந்திய அமைதிப்படை யாழ் உயர் அதிகாரிகளிடம் இருந்து பதில் வருவதில் ஏற்பட்டுள்ள செயற்பாடு ரீதியான தாமதத்தினாலேயே நாளை மேற்கொள்ளப்பட இருந்த உண்ணாவிரதம் பின் போடப்பட்டது என்றும்—

அவர்களிடம் இருந்து பதில் கிடைத்த பின்னர் அதனைப் பொறுத்து

(6–ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலைக் கழக மாணவர்களுக்கு பயமுறுத்தல்

கொழும்பு, மார்ச் 18

கொழும்புப் பல்கலைக் கழகத்தில் கடந்த சனிக்கிழமை பத்திரிகைத் துறை டிப்ளோமா வகுப்பில் படித்துக்கொண்டிருந்தவர்கள் இனந்தெரியாதவர்களினால் பயமுறுத்தப்பட்டனர்.

பட்டதாரி மாணவர்கள் என்று சந்தேகிக்கப்படும் சிலர் விரிவுரை மண்டபத்திற்குள் புகுந்து உள்ளே இருந்தவர்களை வெளியேறும்படி உத்தரவிட்டனராம்.

(ஒ-எ)

## இசையின் விபரீதம் 90 பேர் விபத்தில் பலி!

புதுடில்லி மார்ச் 18

இசை கேட்டு அரவமும் மயங்கும். பட்சிகள் கிறங்கும். பஸ் சாரதி ஒருவரும் இசையில் மயங்கினர். அதனால் பஸ் விபத்தில் சிக்கியது.

அந்த விபரீதத்தால் அப்பாவிப் பயணிகள் 90க்கும் அதிகமானோர் உயிரிழக்கவேண்டி ஏற்பட்டுவிட்டது.

மத்தியப் பிரதேசத்தில் நேற்று இந்த பஸ் விபத்துச் சம்பவம் நிகழ்ந்தது.

திருமண வீடு ஒன்றுக்குச் சென்றுகொண்டிருந்த கோஷ்டி ஒன்று இந்த பஸ்ஸில் பயணம் செய்தது.

பஸ்ஸினுள் இசை ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது. வளைவு ஒன்றில் பஸ் சென்றுகொண்டிருந்த சமயம் வேறொரு இசை ஒலிப்பதிவு நாடாவை மாற்றச் சாரதி எத்தனித்தார். அச்சமயம் சாரதியின் கட்டுப்பாட்டில் இருந்து மீறிச் சென்ற பஸ், பின்னர் தடம்புரண்டது. அதைத் தொடர்ந்து பஸ் தீப்பற்றி எரிந்தது. இதில் சிக்கிய பயணிகளில் 90க்கும் அதிகமானோர் உயிரிழந்தனர் என முதலில் வந்த தகவல்கள் தெரிவித்தன. உயிரிழந்தோர் இதிலும் அதிகம் என்று பின்னர் கூறப்பட்டது. (ஒ-எ)

## ஐ.தே. கட்சி பிரமுகர் கொலை

கொழும்பு, மார்ச் 18

வெலிகம பொலீஸ் பகுதியில் ஐ.தே.க பிரமுகர் ஒருவர் இனந்தெரியாதநபர்களினால் கடந்த திங்கட்கிழமை கொல்லப்பட்டார்.

தெனிப்பிட்டியாவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

உயிரிழந்தவரின் பெயர் கே, நிமால் என்பதாகும். (ஒ-எ)

### சுபநேரம்

18-03-1988
பங்குனி 5
வெள்ளிக்கிழமை
சுபநேரம்:
6–19 முதல் 7 -49 வரை
ராகுகாலம்:
10-49முதல் 12-19வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

# நமது நாடு பலவீனமுற நாம் விட்ட தவறுகளே காரணம்

### வெளிநாட்டார் அல்லர் என்கிறார் ஜே ஆர்.

கொழும்பு, மார்ச் 18

நமது நாடு இன்று பலவீனமான நிலையில் உள்ளது இதற்குக் காரணம் நாம்கடந்த காலங்களில் விட்ட தவறுகளே —வெளிநாட்டார் அல்லர்.

இப்படிச் சொன்னார் ஜனாதிபதி ஜெயவர்த்தன.

ஜப்பான் — இலங்கை இலவச பாடசாலையின் ஏழாவது வருடாந்தக் கூட்டத்தில் ஜனாதிபதி பேசினார்.

அவர்மேலும்சொன்னதாவது;

நாம் இன்று கஷ்டமான காலகட்டத்தில் வாழ்கின்றோம். எமது நாட்டுச் சரித்திரத்தில் இதைவிடக் கஷ்டமான காலமும் இருந்தது.

மக்களினால் தெரிவு செய்யப்பட்ட அரசுதான் இன்று பதவியில் உள்ளது அரசாங்கத்தை எவரும் விமர்சிக்கும் சுதந்திரம் உண்டு. பத்திரிகைச் சுதந்திரமும் உண்டு.

ஏனைய நாடுகள் போன்று நமது நாடு ஏன் முன்னேற்றம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மூன்றுவது நாளாக

### யாழ். நகர் நேற்றும் ஸ்தம்பித நிலையில்

யாழ்ப்பாணம், மார்ச் 18

கடந்த இரண்டு நாட்களைப் போலவேநேற்றும் நகரில் சனநடமாட்டம் மந்தமாகவே காணப்பட்டது.

வாகனங்களின் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தகூடன், யாழ் ஆஸ்பத்திரியில் நோயாளரின் வருகை ஓரளவு அதிகரித்திருந்தது.

ஊழியர் வருகை குறைவாக இருந்தபோதிலும் அரச அலுவலகங்கள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழர்களின் நிர்வாகம் வந்ததன் பின்னரே புனர் நிர்மாண வேலை

### இந்தியக் குழுவிடம் வலியுறுத்து

யாழ்ப்பாணம் மார்ச் 18

தமிழர்களினால் நிர்வகிக்கப்படும் நிரந்தர நிர்வாகம் செயல் உருப்பெற்ற பின்னரே வடக்கு. கிழக்குப் பகுதிகளில் புனர்நிர்மாண வேலைகளைச் செய்ய வேண்டும் — இவ்வாறு சேதங்களை மதிப்பிட யாழ் வந்த இந்திய அதிகாரிகள் குழுவிடம் பிரசைகள் குழுக்களின் இணைப்புக்குழு உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

இந்திய உள்துறை அமைச்சின் (புனர்வாழ்வு) மேலதிச் செயலாளர் திரு. ஆர். ஸ்ரீநிவாசன் தலைமையிலான ஐவர் கொண்ட குழுவொன்று யாழ்ப்பாணம் வந்துள்ளது.

திரு எஸ் அருணாசலம் தலைமையிலான பிரசைகள் குழுக்களின் இணைப்புக் குழுவை, இந்திய அதிகாரிகள் குழு சந்தித்துப் பேசியது. அவ்வேளை யாழ். அன்னையர் முன்னணிப் பிரதிநிதிகளும் சமுகம் அளித்திருந்தனர்

இந்தச் சந்திப்பின் போது அண்மையில் நடைபெற்ற சம்பவங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்களையும், புனர்வாழ்வு உதவிகளையும் கூட்டுறவு சங்கங்களினூடாக பொருள்களாக வழங்குவது பற்றியும் ஆராயப்பட்டது.

மேலும் வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு

(6–ஆம் பக்கம் பார்க்க)




அனேகமாய் பலபேர், வயது போகப் போகத்தான் தாங்கள் விட்ட பிழையளை உணருகிறவை அதுவும் ஒரு வித சுடலை ஞானம் தான் பாருங்கோ..!

## வங்கி ஊழியரின் சட்டப்படி வேலை இயக்கம் தொடர்ந்து நடக்கிறது

கொழும்பு, மார்ச் 18

இலங்கை வங்கி ஊழியர்கள் கடந்த பல நாட்களாக சம்பள உயர்வு கோரி நடத்தும் சட்டப்படி வேலை செய்யும் இயக்கம் தொடர்ந்து நடைபெறுகிறது

இவர்களின் இந்த நடவடிக்கையால் கொழும்பில் உள்ள பல இலங்கை வங்கிக் கிளைகளிலும் வாடிக்கையாளர்கள் கூட்டம் அதிகரித்துக் காணப்படுகிறது.

சட்டப்படி வேலை செய்யும் இயக்கத்தைத் தொடர்ந்து இலங்கை வங்கியின் காசோலைகளை ஏற்பதற்கு வர்த்தகர்களும் மறுப்புத் தெரிவித்து வருகின்றனர்.

வங்கிஊழியர்கள்40சதவீத சம்பள அதிகரிப்பு கோரியுள்ளனர் வங்கி ஊழியர்கள் சங்க முக்கியஸ்தர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் நடாத்திய பேச்சுவார்த்தைகளில் அரசு 35சதவீத சம்பள அதிகரிப்புக்கு சம்மதித்துள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் தொடர்ந்து 40 சதவீத சம்பள அதிகரிப்பை வலியுறுத்தப்பட்டு, சட்டப்படி வேலை செய்யும் இயக்கம் தொடர்கிறது. (ஒ 3)

## தெற்கில் உள்ள தமிழ் டாக்டர்களிடம்

# யாழ். மருத்துவ பீடத்தில் பணியாற்ற வருமாறு

### நேரில் அழைப்பு

–அலுவலகச் செய்தியாளர் ஜோய் பூரணச் சந்திரன்–

யாழ்ப்பாணம் மார்ச் 18

தென்பகுதியில் கடமை புரியும் தமிழ் டாக்டர்களையும், மருத்துவபீட விரிவுரையாளர்களையும் யாழ் மருத்துவபீடத்திலும் போதனாவைத்திய சாலையிலும் வந்து கடமைபுரியுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

"யாழ். மருத்துவ பீடத்தைக் காப்பாற்றும்" இயக்கத்தைச் சேர்ந்த மருத்துவ பீட மாணவர்கள் தூதுக் குழுவே சம்பந்தப்பட்டவர்களை நேரில் சந்தித்து மேற்கண்ட வேண்டுகோளை விடுத்தது.

யாழ் மருத்துவபீடத்திலும் போதனா வைத்தியசாலையிலும் வைத்தியர்கள், விரிவுரையாளர்கள் பற்றாக் குறை நிலவுகிறது. மருத்துவ பீடம் தொடர்ந்து இயங்க முடியாத சூழ்நிலையை தோற்றுவித்துள்ளது

இந்நிலையை உயரதிகாரிகளுடன் கலந்தாலோசித்து தீர்ப்பதற்காக யாழ். மருத்துவக் கல்லூரி மாணவர்கள் குழுவொன்று கடந்த வாரம் கொழும்பு சென்றிருந்தது. இக்குழு தெற்கில் பணிபுரியும் தமிழ் டாக்டர்களையும் மருத்துவ பீட விரிவுரையாளர்களையும் நேரில் சந்தித்தது.

மேலும் இத் தூதுக் குழு உயர்கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் ஸ்டான்லி கல்பகே போதனா வைத்தியசாலை அமைச்சின் உயரதிகாரிகள் ஆகியோரையும் சந்தித்து கலந்துரையாடியது. பேராசிரியர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

உ
சிவமயம்

சைவசமய பாடப்பரீட்சை

சைவபரிபாலனசபை — யாழ்ப்பாணம்
பாடசாலைகளுக்கான

அறிவித்தல்

20-3-88 ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த சைவ சமய பாடப் பரீட்சை தவிர்க்க முடியாத காரணத்தால் அன்று நடைபெறமாட்டாது. அப்பரீட்சையானது 27-3-88 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என அறியத்தருகின்றோம்.

வ. கந்தசாமி
கௌரவ பரீட்சைச் செயலாளர்.

450, காங்கேசன் துறை வீதி,
யாழ்ப்பாணம்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பேட்டுக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா & பிறதர்ஸ் பிரம்படி லேன், கொக்குவில். (1950)

### காணி விற்பனை

மூளாயில், மாவடி மூளாய் வீதியில் கூட்டுறவு ஆஸ்பத்திரி, அமெரிக்கன் மிசன் பாடசாலைக்கு அருகாமையில் ஆறு பரப்பு நிலம் விற்பனைக்குண்டு விபரங்களுக்குத் தொடர்பு: நா.சபாபதிநாதன், நில அளவையாளர், சித்தன் கேணி. (1953)

பருத்தித்துறை புலோலிக் கிராமக் கோட்டடியில் வீடுகட்டக் கூடிய நாலு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: மு. மருதபிரான், 'ராணி பவனம்' கிராமக் கோட்டடி, புலோலி. (2005)

### தேவை

சகலவிதமான வெல்டிங் வேலை தெரிந்தவர்களும், உதவியாளர்களும் உடன் தேவை. நேரில் வரவும். சினே வெல்டிங் வேர்க்ஸ், 379, பீச்றோட் குருநகர், யாழ்ப்பாணம். (1977)

தேவஸ்தான பசுவில் பால் கறக்கவும் கோவில் வேலைகள் தெரிந்த பல வேலை தெரிந்த ஒருவர் தேவை. விபரங்களுக்கு நேரில் வரவும். துர்க்கை அம்மன் தேவஸ்தானம் நுணாவில் மேற்கு, சாவகச்சேரி. (1980)

### வகுப்புக்கள்

Radio, T V Air Conditioning Refrigeration, வயறிங், வெல்டிங், மோட்டார் மெக்கானிசம், வைண்டிங், Spoken English, Typing சிறந்த செய்முறைப் பயிற்சிகளுடன் ஆரம்பமாகின்றன. அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும். Vispa Engineering Aid Hall 328, நாவலர் வீதி, (ஆனைப்பந்திச் சந்திக்கு அருகில்) யாழ்ப்பாணம். (1940)

### சேவை

அலோசனைச் சேவைகள்: உலோக வார்ப்பியல் சம்பந்தமான நிபுணத்துவ ஆலோசனைகள் பெற விரும்புவோர் தொடர்பு கொள்க C/o உதயன் விளம்பர இல 91. விசாரணைகள் அனுப்ப வேண்டிய முகவரி திரு. கு. சந்தசாமி ''யோகலட்சுமி'' அராலி வடக்கு, வட்டுக் கோட்டை. [1951]

### போட்டோ ஸ்ரட்

'கிளின்-கட்' யாழ் நகரின் முன்னணிநிறுவனம். உங்களின் போட்டோ ஸ்ரட் பிரதிகளுக்கு: கிளின்-கட் இல:- 239 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

### மணமகள் தேவை

நிரந்தர வதிவிட விசா பெற்று விரைவில் அவுஸ்திரேலியா செல்லவிருக்கும் யாழ் இந்து வேளாள குல தீய பழக்கங்களற்ற 32 வயதுப் பட்டதாரிக்கு அவுஸ்திரேலியாவிலிருக்கும் பெற்றோர் சகோதரர்கள் அதே குலத்தைச் சேர்ந்த தகுதியான மணமகளை எதிர்பார்க்கின்றனர் முழு விபரங்களுடன் விரைவில் தொடர்பு கொள்ளவும்: விளம்பர இல. 91, C/o உதயன். [1957]

### தவறிவிட்டது

நாகராசா ஜெயரஞ்சினியின் அடையாள அட்டை (695911653V) யும், வேம்படி மகளிர் கல்லூரி மாணவர் அடையாள அட்டையும் மணிக்கூட்டு வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 363, மணிக்கூட்டு வீதி, இல்லத்தில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். [2067]

### புத்தகங்கள்

பல் தெரிவு வினாக்கள் மூலம் பொது இரசாயனமும் பௌதிக இரசாயனமும் (உயர் வகுப்புக்குரியது) ஆசிரியர்கள் ம. செல்வரத்தினம் B Sc இராஜேஸ்வரி மகேஸ்வரன் B Sc விலை ரூபா 60/- விற்பனையாளர்கள் பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம் 1602)

### TYPEWRITER

தட்டச்சு இயந்திரங்கள் சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும். மற்றும் வாங்கவும் — விற்கவும் Fudo Enterprises. 39 / 17, Power House Road, 3rd Lane, Jaffna (1803)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**யோ யோசப்மணி**

(கட்டிட ஒப்பந்தக்காரர்)

தோற்றம்: 01 - 01 - 1935 மறைவு: 18 - 03 - 1985

உன் இழப்பை உணர்கிறோம் ஐயா!
உன் நினைவால் நனைகிறோம் ஐயா!

9, யோசப்மணி ஒழுங்கை, மருகடி வீதி, யாழ்ப்பாணம்.

மனைவி மக்கள், சகோதர சகோதரிகள். (2050)

## 147ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டியும்

**அமரர் சிவராஜா சுந்தரேசன்**

மலர்வு: 20 - 8 - 1945 உதிர்வு: 24 - 10 - 1987

யாருக்கொரு தீங்கினையும் நீ நினைக்கவில்லை
எந்தவொரு பாதகத்தையும் செய்யவில்லையே
ஏது மறியாத எம்மகனே, ஈசனே,
நாமறியா வேளையதில்
மரணத்தைத் தழுவினையே
என்றும் எம்மனதை விட்டு
நீ நீங்காதிருப்பாயே
உன் ஆத்மா சாந்தி பெற
இறைவனையே வேண்டுவமே.

இன்று 18-03-88 ல் நடைபெறவிருக்கும் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

திரு. திருமதி சிவராசா (பெற்றோர்)
சகோதரர்கள்
மைத்துனர், மருமக்கள்,
திரு திருமதி
R. T சற்குணம்
மாமன், மாமி.

பலாலி வீதி, திருநெல்வேலி.

(1916)

## மகாறவின் 1ஆம் வருட நினைவுநாள்



மலர்வு: மலர்

நிறைவு: 18-03 1987 யாழ்ப்பாணம்

**திருமதி நீற்றம்மாள் குருஸ்**

(காலஞ்சென்ற M ஆனந்தம்கோமஸ் மனைவி)

இவரின் நித்திய சாந்திக்காக 18-3 88 வெள்ளிக்கிழமை காலை 6-15 மணிக்கு யாழ். கொஞ்சேஞ்சி மாதா மேற்றிராசன தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படுகிறது சகலரும் பங்குபற்றுமாறு தயவுடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

பிரிவால் துயருறும்,
மக்கள்-மருமக்கள்,
பேரன், பேத்திமார்,
சகோதரர்கள்.

இல. 9, மெயின் வீதி, யாழ்ப்பாணம்

(1979

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



**திருமதி சிவலிங்கம் செல்வராணி**

தோற்றம்: 2 - 8 - 1958 மறைவு: 17 - 2 - 1988

இவர் அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், காலஞ்சென்ற நல்லையா, செல்லம்மா ஆகியோரின் மகளும் திருநெல்வேலியைச் சேர்ந்த பிரபல சிற்பாசாரியார் ஆறுமுகத்தின் மகன் சிவலிங்கத்தின் மனைவியும் ஆவார்.

இன்று [18 - 3 - 1988] திருநெல்வேலி இல்லத்தில் நடைபெறவுள்ள இவரின் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து அன்னாரின் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

ஆறுமுகம் சிற்பாலயம்,
அம்மன் வீதி,
திருநெல்வேலி.
[1976]

கணவன்,
பிள்ளைகள்,
(சிவசங்கர், சிவரஞ்சனி, சிவராஜ்)

## வாடிக்கையாளர்களே! வியாபாரிகளே!

1. நல்ல விலையில் கொப்பரு கொள்வனவு செய்யப்படும்
2. நன்றாக காய்ந்த தேங்காய்ப்பால் எடுத்த ''பூ'' வையும் சேகரித்துப் பணமாக்குங்கள்.
3. கைவசமுள்ள ''கொப்பரு'' ''பூ'' ஆகியவற்றை உடன் கொடுத்து அதன் பெறுமதியைப் பெற்றுக் கொள்ளவும்
4. NO. 1 தேங்காய் எண்ணெய்க்கு விஜயம் செய்யுங்கள்.
5. குறைந்த சலாரில் எண்ணெய் வடித்துப் பெற்றுக்கொள்ள வேண்டுமா? உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**மல்ரி - ஒயில் இன்டஸ்ரீஸ் லிமிட்டெட்**

**OIL MILLERS**

காங்கேசன்துறை வீதி,
இணுவில்.
(இணுவில் ஆஸ்பத்திரிக்கு முன்புறம்)

## 150 ஆவது நாள் நினைவஞ்சலி

**சத்தியபாலன் நேசமலர்**

அன்னையின் மடியில்:- 28- 06- 1958

அரக்கன் அழிப்பில்:- 20- 10- 1987

அன்பின் திருவுருவாய் பண்பின்சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய் குடும்பத்தின் ஒளி விளக்காய்த் திகழ்ந்து எம் நெஞ்சம் எல்லாம் நிறைந்திருந்த எங்கள் குலவிளக்கே! எங்களை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்பு நேசமே! உங்கள் முகம் எங்கள் நெஞ்சங்களை விட்டு என்றும் அகலாதம்மா!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தங்கள் பிரிவால் வாடும்

கணவன், பிள்ளைகள்,
பெற்றோர், சகோதரர்கள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

அச்செழு வடக்கு,
ஈவினை.

(2070)

## வெற்றிடங்கள்

பின்வரும் பதவிகளுக்கு அனுபவமும், தகுதியும், திறமையும் உள்ளவர்கள் உடன் தேவைப்படுகிறார்கள்.

1. அச்சுக்கோர்ப்பாளர் (ஆண்கள் மட்டும்) [ தமிழ் & ஆங்கிலம் ]
2. புத்தகம் கட்டுபவர்
3. இயந்திர இயக்குநர் [பிளேட்டின் இயந்திரம், & ஹைடில்பேர்க் சிலிண்டர் ]

விண்ணப்பதாரர் தம்மைப் பற்றிய சகல விபரங்களும் கொண்ட விண்ணப்பத்துடன் கீழ்க் கண்ட விலாசத்தில் நேரில் தொடர்பு கொள்ளவும்:-

**ஷப்ரு**

(வர்த்தக அச்சகப் பகுதி)
207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

## முக்கிய அறிவித்தல்

**இலங்கை மின்சார சபை**

**மின் தடை**

சுன்னாகம் மின்சார நிலையத்திலுள்ள (132 கே. வீ. கிறிட்) உபநிலையத்தின் திருத்த வேலைகள் காரணமாக 1988- 03- 20 ஞாயிற்றுக்கிழமை காலை 8 00 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை சுன்னாகம், காங்கேசன்துறை, வட்டுக் கோட்டை, வேலணை, யாழ்ப்பாணம், சாவகச்சேரி, பருத்தித்துறை ஆகிய யாழ்ப்பாணப் பிரதேசத்தின் சகல மின் அத்தியட்சகர் பகுதிகளுக்கும் மின் விநியோகம் தடைசெய்யப்படும என்பதை இத்தால் சகல மின் பாவனையாளர்களுக்கும் அறியத் தருகின்றேன்.

இதனால் ஏற்படும் அசௌகரியங்களுக்காக இலங்கை மின்சார சபை தனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றது.

மின் பொறியியலாளர்
யாழ்ப்பாணப் பிரதேசம்

இலங்கை மின்சார சபை,
சுன்னாகம்.
1988- 03- 16

## பிரயாண ஒழுங்குகள்

**சவூதி அரேபியா**

**உடனடி வேலைவாய்ப்புகள்**

1. பொறியியலாளர்கள்:

| | | |
|---|---|---|
| 1. | பாரமரிப்பு என்ஜினியர் (கப்பல் துறை) | 3000 SR - 4000 SR |
| 2. | மின்னியல் என்ஜினியர் | 1800 SR - 2500 SR |
| 3. | இலத்திரனியல் என்ஜினியர் | 1800 SR - 2500 SR |
| 4. | குளிரூட்டியல் என்ஜினியர் | 2000 SR - 2500 SR |
| 5. | தொலைத்தொடர்பு என்ஜினியர் | 2000 SR - 2500 SR |
| 6. | இயந்திரவியல் என்ஜினியர் | 1800 SR - 2500 SR |

2. தொழில் நுட்பவியலாளர்கள்:

| | | |
|---|---|---|
| 1. | இலத்திரனியல் | 700 - 800 SR |
| 2. | தொலைத்தொடர்பு | 800 SR |
| 3 | கப்பல்துறை இயந்திர தொழிலாளர்கள் | 800 SR |
| 4. | கப்பல்துறை மின்னிணைப்பாளர்கள் | 800 SR |
| 5. | குளிரூட்டல் - தொழிலாளர்கள் | 800 SR |
| 6. | மின்பட வரைஞர் | 1000 - 1200 SR |
| 7. | கனரக வாகன திருத்தவியலாளர்கள் | 800 SR |

| | | |
|---|---|---|
| 3. | பாரந்தூக்கி இயக்குநர் | 700 - 800 SR |
| 4. | சுழியோடிகள் | 500 SR |
| 5. | மின்சுருள் சுற்றுபவர்கள் | 650 - 750 SR |
| 6. | குழாய் பொருத்துனர் | 500 - 650 SR |
| 7. | கூலியாட்கள் (வாகன சாரதி லைசென்ஸ் உடையவர்) | 350 + 100 SR |
| 8. | துப்பரவாக்கிகள் - கூலியாட்கள் | 300 + 100 SR |

எல்லா வகையினருக்கும் 3 வருட ஒப்பந்தம் + இலவச தங்குமிடம் + உணவு

சனி. ஞாயிற்றுக் கிழமைகளில் நேர்முகப் பரீட்சை இருப்பதால் உடன் தொடர்பு கொள்க.

**A. லிங்கம்**
காளுவன் சந்தி,
சுழிபுரம்.

**அ. தவச்செல்வம்**
காளுவன் சந்தி,
சுழிபுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலில் ஜனநாயக வழிக்குத் திரும்ப வேண்டியது ஜே. ஆரே.

## நாம் அல்ல என்கிறார் ஈரோஸ் பாலகுமார்

— உதயன் செய்தியாளர்: அகில்ராஜ் —

ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனாவும் அவரது அரசின் பிரமுகர்களும் போராளிகள் ஜனநாயக வழிக்குத் திரும்ப வேண்டும் என்று அடிக்கடி கூறி வருகிறார்கள். இது நகைப்புக்கு இடமானது.

தற்போதைய சூழ்நிலையில் எம்மைப் பொறுத்தவரையில் ஜனநாயக வழிக்குத் திரும்ப வேண்டியது ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் அரசாங்கமே.

ஈரோஸ் இயக்க முக்கிய பிரமுகர் திரு வேலுப்பிள்ளை பாலகுமார் உதயனுக்கு அளித்த விசேட பேட்டியின் போது இவ்வாறு தெரிவித்தார்.

கேள்வி: இன்றைய இக்கட்டான சூழ்நிலை குறித்து நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?

பதில்: ஜூலை 29 ஆம் திகதி இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட போது நிலவிய மன அமைதியும் மகிழ்ச்சியும் இன்று மக்களிடையே இல்லை.

### திருப்தி இல்லை

எம்மைப் பொறுத்தவரையில் ஒப்பந்தம் எமக்கு திருப்தி அளிக்காத போதிலும் அதன் உள்ளார்ந்த அர்த்தங்களைப் புரிந்து கொண்டோம்.

அதன் அடிப்படையில் திருப்திகரமான முறையில் ஆயுத ஒப்படைப்பு செய்து இன்றுவரை எவ்வளவு நிர்ப்பந்தங்கள், நெருக்கடிகள் கொடுக்கப்பட்ட போதிலும் மிகுந்த சிக்கலான சூழ்நிலையில் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றி வருகிறோம்.

ஆனால் எல்லாவற்றையும் நிபந்தனையின்றி ஏற்றுக் கொள்ளவோ அல்லது வாய்மூடி மௌனியாக இருக்கவோ நாங்கள் தயாராக இல்லை.

ஒப்பந்தத்தின் குறைபாடுகள், அதனை இலங்கை அரசு திரித்துக் கூறும் விதங்கள் இவை குறித்து நாம் மக்களுக்கு தெளிவு படுத்தி வருகிறோம்.

உதாரணமாக ஒன்றைக் கூறுகிறேன்.

நீண்டகாலமாக ஆயுதம் தாங்கிய போராட்டத்தில் ஈடுபட்டு, சிறையில் வாடும் ஆயிரக்கணக்கான தமிழ் பேசும் இளைஞர்களை விடுவிக்காமல் ஒப்பந்தத்தின் அடிப்படை உரிமைகளை மீறி ஸ்ரீலங்கா அரசு செயற்படுகிறது.

இதன் உச்சக்கட்டமாக எமது தோழரான ஹரனை கைது செய்து இன்றும் அவர் பலாலியில் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்.

### நாம் எப்படி ஏற்பது ?

அதே சமயம் தமிழ் பேசும் மக்களின் பாதிக்கப்பட்ட அங்கமான மலையக மக்களை இன்றும் நாடற்றவர்களாகக் கணித்து காலாவதியாகிப்போன சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் லட்சக்கணக்கான மக்களை இலங்கை அரசு நாடு கடத்த எடுக்கும் முயற்சிகளை நாம் எவ்வாறு ஏற்றுக்கொள்ள முடியும்?

கேள்வி: தற்போதைய சூழ்நிலையில் இலங்கை அரசும், இந்திய அரசும் நடந்து கொள்ளும் முறைகள் சரியானவையா?

பதில்: தற்போழுது இலங்கை, இந்திய அரசுகள் ஜனநாயக வழிக்கு மீண்டும் திரும்புதல் மிக மிக அவசியம்.

ஜனநாயகத்திற்கும் ஜே. ஆர். அரசாங்கத்துக்கும் என்ன சம்பந்தம்? வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின்படி தமிழ் ஈழக்கோரிக்கையை தமிழ் மக்களின் முன் வைத்து வெற்றி பெற்று அதன் மூலம் நாடாளுமன்றம் சென்ற தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு என்ன நடந்தது?

கிழக்கு மாகாணத்தில் ஒற்றுமையாக இருந்து வரும் தமிழ் - முஸ்லிம் மக்களிடையே பிளவுகளை உண்டாக்க "ஜிகாத்" போன்ற அமைப்புகளை உருவாக்கி டணமும் ஆயுதமும் வழங்கி செயல்படுவது தான் ஜே. ஆரின் ஜனநாயகமா?

எம்மைப் பொறுத்தவரையில் முதல் ஜனநாயக வழியில திரும்ப வேண்டியது ஜே. ஆர் அரசாங்கமே.

கேள்வி:- தற்பொழுது தோன்றியுள்ள பிரச்சினைகளுக்கு உங்கள் இயக்கம் எந்த வகையில் தீர்வு காண முனைகிறது.

பதில்:- எமது மக்களுக்கு ஞாபக மறதி கூட இருக்கலாம் (குறிப்பாக யாழ்ப்பாண மக்கள்) எமது உண்மையான பிரச்சினைதான் என்ன?

1948 ஆண்டு கொண்டு வரப்பட்ட மலையக மக்களை நாடற்றவர்களாக்கிய சட்டம், 1956 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட மத்தியதர வகுப்பு மக்களின் வாழ்வை சீர்குலைத்த சிங்களம் மட்டும் சட்டம், இந்த நாட்டில் பாட்டாளி மக்களின் வர்க்கத்தை சீர்குலைத்து நடு கடத்திய சிறிமா — சாஸ்திரி ஒப்பந்தம் —

ஏழை தமிழ் முஸ்லிம் விவசாயிகளின் நிலத்தைப் பறித்தெடுத்த சிங்கள விவசாயக் குடியேற்றத் திட்டம், உயர் கல்வி வாய்ப்பை தட்டிப் பறித்த இன ரீதியான தரப்படுத்துதல் திட்டம்- எல்லாவற்றுக்கும் ஒட்டுமொத்தமாக தமிழ் மக்களின் இனப் படுகொலைக்கு வித்திட்ட தமிழ் பேசும் மக்களின் வாழ்க்கையை சின்னாபின்னமாக்கிய அவசரகாலச்சட்டம் பயங்கரவாதத் தடைச் சட்டம் ஆகியவற்றுக்கு ஒப்பந்தம் தீர்வு கண்டதாக இல்லை.

### ஒப்பந்தத்தை எதிர்க்கவில்லை

எனவே தான் ஒப்பந்தம், இடைக்காலத் தீர்வு ஒன்றுக்காக மட்டுமே அமைய முடியும் என நாங்கள் கூறுகிறோம்

அது எம் பூரணப்படுத்தப்பட்டதாயின் அதனுடைய பலவீனங்களும் குறைபாடுகளும், சுட்டிக்காட்டப்பட்டு நிவிர்த்தி செய்யப்பட வேண்டும். ஆகவே நாம் ஒப்பந்தத்தை எதிர்க்கவில்லை. இந்திய அரசு நலன்களுக்கு குந்தகமாக நடக்க விரும்பவில்லை.

தற்பொழுது தோன்றிய நெருக்கடிகளுக்கு சமாதானத் தீர்வு ஒன்றைக் காணவே விரும்புகிறோம்

கேள்வி:- அந்த தீர்வு எவ்வாறானதாக அமைய வேண்டும் என விரும்புகிறீர்கள்?

பதில்:- இந்திய அமைதிப்படை இந்தியாவின் பாதுகாப்புக்கு குந்தகமாக இருக்கக் கூடிய கேந்திர நிலையங்களில்மட்டுமே கேந்திர கண்காணிப்பு படையாக செயற்பட வேண்டும் என விரும்புகிறோம்.

அதற்காகவே நாம ஜனநாயக வரம்புக்குட்பட்ட சில போராட்டங்களை ஆரம்பித்து நடத்துகிறோம்.

ஒப்பந்தம் குறித்து மக்களது கருத்தை

(4 ஆம் பக்கம் பார்க்க)

# ஜானகியின் இரகசியத்தை வெளியிடுவேன்

## திருநாவுக்கரசு பயமுறுத்தல்

— சென்னையிலிருந்து எமது சிறப்புப் பிரதிநிதி ந வித்தியாதரன் —

சென்னை, மார்ச் 17

சென்னையில் வீரப்பன் ரூ 27 கோடியில் மாபெரும் ஓட்டல் ஒன்றை கட்டுகிறாரே. அதற்கு பணம் வந்தது எப்படி?' என்று திருநாவுக்கரசு புதிய ஊழல் குற்றச்சாட்டை கூறி இருக்கிறார்.

முன்னாள் அமைச்சர் திருநாவுக்கரசு அண்மையில் சென்னையில் செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்தார். அப்போது அவர்கூறியதாவது:-

### 500 ரூபா சம்பளம்

நான் கடந்த வாரம் வீரப்பன் மீது கூறிய குற்றச்சாட்டுகளுக்கு அவர் சரியாகவும் முறையாகவும் பதில் சொல்லவில்லை.

புதுக்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான இடத்தை 'ஆர். எம். வீரப்பன் அன்ட்சன்ஸ்' என்ற பெயருக்கு ஒதுக்கீடு செய்து கொண்டது உண்மை.

500 ரூபா சம்பளத்தில் வேலை பார்த்த வீரப்பன் வீட்டில் 8 பேர் வருமான வரி கட்டும் அளவுக்கு உயர்ந்தது எப்படி? அவர்கள் என்ன தொழில் செய்கிறார்கள்.

### சத்யா மூவிஸ் விவகாரம்

சத்யா மூவிஸ் படக் கம்பெனி ஏற்கனவே இருந்தது. அதில் வீரப்பன் மனேஜர் தான்.

அமைச்சரான பிறகு தான் அவர் தவறு செய்தார் என்று நான் நினைத்தேன். அவர் கூறியிருப்பதைப் பார்த்தால், சத்யா மூவிஸ் மானேஜராக இருந்த போதே, புரட்சித் தலைவர் கால்ஷீட் வாங்கிக் கொடுப்பது போன்றவைகளில் தவறு செய்து தன்னை வளர்த்துக் கொண்டிருப்பது தெரிகிறது.

அப்படி இருந்தால் தான் 500 ரூபா சம்பளம் வாங்கிய அவர் படமுதலாளியாக மாறியிருக்க முடியும்

கடந்தவாரம்சென்ன குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் இன்னும் அப்படியே இருக்கிறது. இன்று மீண்டும் 3 குற்றச்சாட்டுக்களை வெளியிடுகிறேன்.

### ரூ 27 கோடியில் ஓட்டல்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தில் தண்டமுடி மோகன் ராவ் என்பவருடன் சேர்ந்து சென்னையில் 27 கோடி ரூபாய் மதிப்புள்ள பெரிய ஓட்டல் கட்டும் வேலைகள் தொடங்கப்பட்டு வருகிறதா, இல்லையா? இதில் வீரப்பன் மருமகன் இயக்குனராவார்.

### ஜானகியின் இரகசியத்தை வெளியிடுவேன்

இதை தொடங்கி வைத்த புண்ணியவான் வீரப்பன் தான். எனவே நாகரிக அரசியல் கருதி, வீரப்பன் நாகாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இல்லை என்றால் வட்டியும், முதலுமாக வாங்கிக் கட்டிக் கொள்ள வேண்டி இருக்கும்.

ஜானகி அம்மாள், வீரப்பன் போன்றவர்களை கண்டிக்க வேண்டும். இல்லாவிட்டால் ஜானகி அம்மாள் அனுமதியோடு தான் வீரப்பன் பேசுகிறார் என்ற அடிப்படையில் ஜானகி சம்பந்தப்பட்ட பல உண்மைகளையும் நான் வெளியில் சொல்ல வேண்டிய கட்டாயம் ஏற்படும்.

'ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்' என்பது போல், கருணாநிதிக்கு சாதகமாக, வீரப்பனும், ஜானகி அம்மாளும் ஏற்படுத்திக் கொடுக்கிறார்கள்.

## தமிழகத்திலிருந்து

# தி. மு. கவுடன் உறவு இல்லை என்கிறார் ஜானகி

சென்னை, மார்ச் 17

தி. மு. கவும் இந்திரா காங்கிரஸ் கட்சியும் எங்கள் எதிரிகள், தேர்தலில் நாங்கள் தனியாகபோட்டியிடப்போகிறோம் இப்படி ஜானகி அம்மாள் கூறினார்.


சென்னையில் இருந்து வெளிவரும் வார ஏடு ஒன்றுக்கு, ஜானகி அம்மாள் பேட்டி அளித்தார்.

கேள்வி:- எதிர் வரும் தேர்தலுக்கு தயாராகி விட்டீர்களா?

ஜானகி:- ஓ "யெஸ்" நாளையே தேர்தல் வந்தாலும் சந்தோஷமே. தேர்தலில் நாங்கள் தனியாகவே போட்டி போடப் போகிறோம். யாரோடும் கூட்டு கிடையாது.

கேள்வி: தி. மு. கவுடன் கூட்டு — சிவாஜியுடன் கூட்டு என்றெல்லாம் செய்தி வருகிறதே?

ஜானகி: "ஊஹூம்... எங்களுக்குத் தி. மு. கவும், இ. காங்கிரசும் எதிரிகள். தேர்தலில் வெற்றிகண்டு திரும்பவும் எம். ஜி. ஆரின் ஆட்சியை அமைத்து நல்ல பெயருடன் அவரிடம் போக வேண்டும் இதுதான் என் லட்சியம்.


நம்பிக்கை நாணயத்தின் சின்னம் → ஷப்ரு


நிதித்துறையில் உங்கள் நண்பன்

★ ஷப்ரு ★

யூனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட் வழங்கும்

நிலையான முதலீட்டுத்திட்டம்

✯ குறைந்த வைப்புத் தொகை 1000/-
✯ மாதாந்த வட்டி பெற குறைந்த வைப்புத் தொகை 5000/-




| காலம் | மாதாந்தம் | முதிர்ச்சி |
|---|---|---|
| 3 மாதங்கள் | ---- | 14 வீதம் |
| 6 மாதங்கள் | ---- | 16 வீதம் |
| 12 மாதங்கள் | 16 வீதம் | 17 வீதம் |
| 24 மாதங்கள் | 17 வீதம் | 18 வீதம் |
| 36 மாதங்கள் | 18 வீதம் | ---- |

உங்கள் வசதிக்கேற்ப பின்வரும் வழிகளில் வட்டியினைப் பெற்றுக்கொள்ளலாம்:-

✯ பணமாக ✯ காசோலையாக ✯ வங்கிக் கணக்கூடாக

நிறுவனத்தின் நிதி நிலை விபரம்

| | 1984 → 85 | 1985 → 86 | 1986 → 87 |
|---|---|---|---|
| மூலதனம் | 2,230,000 | 4,365,000 | 5,917,000 |
| மொத்த ஒதுக்கம் | 1,385,335 | 3,030,474 | 5,425,354 |
| வைப்பு | 27,737,553 | 58,970,366 | 100,577,492 |
| வங்கிக் கடன்கள் | 1,791,516 | 8,283,816 | 7,718,284 |
| ரொக்கமும் வங்கி இருப்பும் | 4,386,371 | 16,206,887 | 25,811,712 |
| வைப்பாளருக்கான வட்டி செலுத்து முன் லாபம் | 5,783,720 | 9,878,026 | 19,310,787 |
| வைப்பாளருக்கான வட்டி | 3,827,514 | 8,505,201 | 16,880,875 |
| வரிசெலுத்து முன் தேறிய லாபம் | 1,956,206 | 1,372,825 | 2,430,012 |
| வரிசெலுத்தியபின் தேறிய லாபம் | 1,356,206 | 1,372,825 | 2,330,012 |
| பங்காளருக்கான சலுகைகள் | | | |

இயக்குநர் சபை

★ பாலசுப்பிரமணியம், A. I. B (Lon)
★ வீ. பி. ஈ. கருணாரட்ண, (சட்டத்தரணி)
★ ஜே. டி நவரட்ணம், A. I. B. (Lon)
★ ஆர். பாலசுப்பிரமணியம்.
★ ஓ. சி. எம். ஹசன்பாரி, B.A

மேலும் தகவல்களைப் பெற எமது அலுவலகத்துடன் நேரடியாகவோ அல்லது கடிதம் மூலமோ தொடர்பு கொள்ளலாம்.

ஷப்ரு நிதி நிறுவனம்

61 நியூ புல்லர்ஸ் வீதி, கொழும்பு - 4. தொலைபேசி: 589310, 500576

யாழ். முகவர், 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 22073


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

உரையாடலில் அறிவை வளர்ப்பதில் நாவைவிடச் செவிக்கே சிறப்பு மிகுதி. உரையாடலின் போதும் கூட அதிகம் பேசாதிருந்தால், பிறரிடம் இருந்து நாம் தப்பிக்கவும் முடியும்.

— பெஞ்சமின் பிராங்ளின்


உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல:-292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805 22073
யாழ்ப்பாணம்.
18.03.1988 த.பெ.இல:-23


## அடிக்கடி இடம் மாற்றமா?

பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையைத் தற்காலிகமாகக் கைதடிக்கு மாற்ற முடிவாகி இருக்கிறது.

இது தற்போது கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக் கட்டடத்தில் இயங்குகிறது. பலாலியில் உள்ள கலாசாலைக் கட்டடங்களுக்குத் திருத்த வேலைகள் செய்வதற்கு நீண்டகாலம் செல்லுமாதலால் மீண்டும் இப்போதைக்கு அங்கு மாற்ற முடியாது எனக் கூறப்படுகிறது.

கோப்பாயிலும் இடநெருக்கடி நிலவுவதால் இரண்டு கலாசாலைப் பிரிவுகளையும் அங்கு ஒன்றாக நடத்துவதில் பல கஷ்டங்கள் உள்ளதாகக் கூறப்படுகிறது.

அதன் காரணமாகவே பலாலி ஆசிரிய கலாசாலையைக் கைதடிக்கு மாற்றுவதற்கு முடிவு செய்யப்பட்டிருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

மேலே கூறப்பட்ட இரண்டு காரணங்களும் சரியானவையாக இருக்கலாம். பலாலிக் கலாசாலையைக் கைதடிக்கு மாற்றுவது தவிர்க்க முடியாததாகவும் இருக்கலாம்.

ஆனால் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையை இப்படி அடிக்கடி இடம் மாற்றுவதால் ஆசிரிய மாணவர்களின் கல்வி பெருமளவில் பாதிக்கப்படும் என்பதில் சந்தேகமில்லை.

அவர்கள் மன நிம்மதியுடன், கல்வியைத் தொடரக்கூடிய வாய்ப்புக் குறைந்துவிடும்.

இடம் மாறித் திரிவதிலேயே காலத்தைச் செலவிட்டால் மனம் ஊன்றித் தமது பாடங்களைப் பயில முடியாது.

எனவே அவர்கள் கல்வி பெருமளவில் பாதிக்கப்படும். அவர்களது கல்வி பாதிக்கப்படுவதென்றால் இனி வரும் பல தலைமுறைகள் மாணவர்களின் கல்வியும் பாதிக்கப்படும்.

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையை அடிக்கடி இடம் மாற்றுவதால் ஆசிரியர்கள் பல கஷ்டங்களை எதிர் நோக்குவார்கள், அவர்களது கல்வி பாதிக்கப்படும் என்பதை விட—

அதன் விளைவாக பல தலைமுறை மாணவர்கள் சீரான போதனையைப் பெறமுடியாமற் போய்விடும் என்பதுமிகவும் ஆபத்தானது. அது ஏற்றுக்கொள்ள முடியாதது நிச்சயம் தவிர்க்கப்பட வேண்டியதும், தடுக்கப்பட வேண்டியதும் ஆகும்.

எனவே ஆசிரியர் கலாசாலைகளை அடிக்கடி இடம் மாற்றுவதைச் சிறிய விடயமாகக் கருதக்கூடாது இயன்றவரை அதனைத் தவிர்த்து கலாசாலைகளை நிரந்தரமான இடங்களில் இயங்குவதற்கு வகை செய்ய வேண்டும். அப்படிச் செய்வது பெரும் பொறுப்பு என உணர்ந்து சம்பந்தப்பட்டவர்கள் செயற்படுவது பிரதானம்.

# அமெரிக்கப் படைகள் ஹொண்டுராஸுக்கு!

## நிக்கரகுவா-கொன்ரு போரில் புதிய திருப்பம்

வாஷிங்டன், மார்ச் 17

ஹொண்டுராஸுக்கு அமெரிக்கப் படைகளை அனுப்ப அதிபர் றேகன் ஆலோசனை நடத்தி வருவதாக வாஷிங்டனில் அறிவிக்கப்பட்டது.

நிக்கரகுவா அரசு, கொன்ரு கிளர்ச்சியாளர்களுக்கு எதிரான இராணுவத் தாக்குதல்களைத் தீவிரப்படுத்தி உள்ளதைத் தொடர்ந்து அமெரிக்கா இந்த நடவடிக்கை எடுத்திருப்பதாக பி.பி.ஸி. வானொலி அறிவித்தது.

3000 வீரர்கள், ஹெலிக்கொப்டர்கள் கொண்ட அணி ஒன்றை அனுப்பும் சாத்தியம் உண்டு என்று அமெரிக்க வெள்ளை மாளிகை பாதுகாப்புப் பேச்சாளர் தெரிவித்தார்.

கொன்ரு கிளர்ச்சியாளர்களுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையின் ஓர் அம்சமாக நிக்கரகுவா அரசுப்படைகள் ஹொண்டுராஸின் தென்பகுதிக்குள் ஊடுருவல் செய்துள்ளன என்றும் ஹொண்டுராஸின் வேண்டுகோளின் மீது அமெரிக்கப்படைகள் அனுப்பப்படவுள்ளன என்றும் அப்பேச்சாளர் மேலும் சொன்னார்.

கொன்ருக்கிளர்ச்சியாளருக்கு உதவுவதற்காகவே அதிபர் றேகன் இந்த நடவடிக்கையை எடுத்திருப்பதாக அமெரிக்க செனட்டர்கள் மத்தியில் அபிப்பிராயம் நிலவுகின்றது.

கொன்ரு கிளர்ச்சியாளருக்கு நிதி உதவி வழங்கும் திட்டத்தை அமெரிக்க காங்கிரஸ் ஏற்கனவே நிராகரித்து விட்டது தெரிந்ததே. (எ)

### வெளி உலகில்

## தளங்கள் பற்றிய மணிலா - அமெரிக்கப் பேச்சுக்களில் தாமதம்

மணிலா, மார்ச் 17

பிலிப்பீன்ஸில் அமெரிக்கத் தளங்கள் நீடிப்பது பற்றிய பேச்சுக்கள் நடத்தப்படுவது தாமதமாகும் என்று அறிவிக்கப்படுகின்றது.

முஸ்லிம் பிரிவினைவாதிகளின் கிளர்ச்சிகளை அடக்குவதில் அரசு தீவிரமாக ஈடுபட்டுள்ள இச்சமயத்தில இப்பேச்சுக்களை நடத்தத் தயாராக இல்லை என்று மணிலா அரசு, அமெரிக்காவுக்கு அறிவித்து விட்டது.

இதனிடையில் அமெரிக்கத் தளங்கள் தொடர்ந்து இருப்பதால் பிலிப்பீன்ஸ் எதுவித பிரயோசனமும் அடையமாட்டாது என்று அதன் வெளியுறவு அமைச்சர் கருத்து வெளியிட்டிருக்கின்றார். (எ)

## சீனாவில் தனியார் வர்த்தகத்துக்கு ஊக்கம்

பீகிங், மார்ச்.17

சீனாவில் தனியார் வர்த்தகத்துக்கு ஊக்கமளிக்கப்படவிருக்கின்றது.

சீனப் பத்திரிகைகளை ஆதாரம் காட்டி ஏ எப் பீ செய்தி ஸ்தாபனம் முன் கண்டவாறு தெரிவித்தது

சீனாவில் தனியார் வர்த்தக நிலையங்கள் 2, கோடி 15 லட்சம் பேருக்கு தொழில் வாய்ப்பு வழங்கியுள்ளது. (எ)

## இந்திய அரசமைப்புச் சட்டம் 59ஆவது முறையாகத்திருத்தம்

புதுடில்லி, மார்ச் 17

இந்திய அரசமைப்புச் சட்டம் 59 ஆவது முறையாகத் திருத்தப்பட்டது.

பஞ்சாப் மாநிலத்தில் அவசரகால நிலைமையை அமுல்செய்யவும்,

ஜனாதிபதி ஆட்சி முறையை மூன்றாண்டு காலத்துக்கு நீடிக்கவும் வகைசெய்ய திருத்தச்சட்டம் இடமளிக்கின்றது.

ஏற்கனவே பஞ்சாப் மாநிலத்தில் ஜனாதிபதி ஆட்சி அமுல் செய்யப்படுகின்றது அடுத்த மாதம் இது காலவதியாகின்றது புதிய சட்டம் இந்த நேரடி ஆட்சியை மூன்றாண்டு காலத்துக்கு நீடிக்க வழிசெய்யும். (எ)

### ஜோர்ஜ் புஷ் குடியரசுவேட்பாளர்

வாஷிங்டன், மார்ச்.17

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் குடியரசு வேட்பாளராக நியமனம் பெறும் வாய்ப்பு உப ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷுக்குக் கிடைக்கவுள்ளது.

இது வரை நடைபெற்ற கட்சி டெலிகேட்டுக்களின் பூர்வாங்கத் தேர்தல்களில் தேவையான அளவு பிரதிநிதிகளின் வாக்குகளை திரு புஷ் பெற்று விட்டார். என்று அறிவிக்கப்படுகின்றது. (எ)

## இஸ்ரவேல் ஹங்கேரி ராஜரீக உறவு

ஜெரூசலம், மார்ச் 17

இஸ்ரவேலில் நலன் காக்கும் பிரிவு ஒன்றை ஹங்கேரி நிறுவியுள்ளது.

இஸ்ரவேலுடனான ராஜதந்திரத் தொடர்புகளை ஆரம்பிப்பதன் முதல் படியாக ஹங்கேரி இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

1967 மத்திய கிழக்கு யுத்தத்தின் பின்னர் இஸ்ரவேலுடன் ராஜதந்திரத் தொடர்புகளை வைத்துள்ள இரண்டாவது கிழக்கு ஐரோப்பிய நாடு ஹங்கேரியாகும்.

1987இல் சுவிஸில் வைத்துக் கைச்சாத்திடப்பட்ட உடன்பாட்டிற்கு இணங்க, டெல் அவிவில் உள்ள சுவிஸ் தூதரகத்தில் ஹங்கேரியின் நலன் காக்கும் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. (எ)

### வளைகுடா யுத்தம்:

# ஆயிரம் ஈராக்கிய வீரர் பலி அல்லது காயம்

தெஹ்ரான், மார்ச் 17

ஈராக்-ஈரான் யுத்தம் தீவிரமடைந்து உள்ளது.

ஈராக்கின் எல்லைப்பட்டினம் ஒன்றைத் தாக்கியதில் 1000க்கு மேற்பட்ட ஈராக்கிய வீரர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் அல்லது காயமடைந்திருக்கலாம் என்று ஈரான் அறிவித்தது

சுமார் 600 ஈராக்கிய வீரர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும் அறிவிக்கப்பட்டது

ஏவுகணைத் தாக்குதலுடன் விமானத் தாக்குதல் ஆகியனவற்றிலும் ஈரான், ஈராக் நாடுகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன என்று அறிவிக்கப்படுகின்றது.

ஈராக் கடந்த ஞாயிற்றுக்கிழமையில் இருந்து 14 நீண்ட தூர ஏவுகணைகளை ஈரானின் தலைநகரம் மீது ஏவியது.

ஈரான்படைகள் 9 ஏவுகணைகளை ஏவியது

ஈரான் படைகள் ஈராக் எல்லைப் புறக் கிராமங்கள் மீது ஷெல் தாக்குதலை நடத்துகின்றது. அதற்குப் பதிலாக ஈராக் விமானப்படை தாக்குதலை ஆரம்பித்தது.

ஈரானின் 6 நகரங்கள் மீது விமானத்தாக்குதல் இடம்பெற்றது.

### 600 வீரர் சிறை ஈரான் அறிவிப்பு

இதனிடையில் ஏவுகணைத்தாக்குதலை நிறுத்தும்படி ஐ. நா பாதுகாப்புச்சபை இரண்டு நாடுகளையும் எச்சரித்துள்ளது. (எ)

## சோவியத் ஏவுகணைகள் அகற்றப்பட்டன

பிரேக் மார்ச் 17

செக்கோஸ்லவேகியாவில் இருந்து குறுகிய தூர ஏவுகணைகளை அகற்றும் திட்டத்தை சோவியத் யூனியன் பூர்த்தி செய்துவிட்டது

சகல ஏவுகணைகளும் சோவியத் யூனியனுக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

அமெரிக்காவில் வைத்துக் கைச்சாத்திடப்பட்ட றேகன் கோர்பச்சேவ் உடன்பாட்டுக்கு இணங்க இந்த ஏவுகணைகள் அகற்றப்பட்டன. எதிர்வரும் மேமாதம் மாஸ்கோவில் நடைபெறவிருக்கும் உச்சி மாநாட்டைத் தொடர்ந்து இவை அழிக்கப்படும். (எ)

## பிலிப்பீன்ஸ் பெண்கள் வெளிநாடுகளில் வேலை செய்யத் தடை!

மணிலா, மார்ச் 17

பிலிப்பீன்ஸ் பெண்கள் தொழில் தேடி வெளிநாடு செல்வதற்கு மணிலா அரசு தடை விதித்துள்ளது.

இம்மாதம் முதலாம் திகதியில் இருந்து இத்தடை அமுலுக்கு வந்தது

சுமார் 2 லட்சம் பிலிப்பீன்ஸ் பெண்கள் ஆசியா, வட அமெரிக்கா, மத்திய கிழக்கு, ஐரோப்பா ஆகிய நாடுகளில் வேலை செய்கின்றனர்.

குறைந்த சம்பளம், மான பங்கப்படுத்துதல் ஆகியவற்றில் இருந்து பிலிப்பீன்ஸ் பெண்களைப் பாதுகாப்பதே இத்தடையின் நோக்கம் என்று மணிலாவின் அரசு அதிகாரிகள் அறிவித்தனர். (எ)

### பனி மழையில் 12 பேர் மரணம்!

புதுடில்லி, மார்ச் 17

ஜம்மு—காஷ்மீர் மாநிலத்தில் கடந்த திங்கள் ஏற்பட்ட பனி மழையில் 12 பேர் உயிரிழந்தனர். (எ)

## அங்கோலாவின் சமரசத் திட்டம் பயனற்றது!

### அமெரிக்கா அறிவிப்பு

வாஷிங்டன், மார்ச் 17

அங்கோலாவில் இருந்து கியூபாத் துருப்புக்கள் எப்போது விலக்கிக் கொள்ளப்படும் என்பதை தென் ஆபிரிக்கச் சமாதானத் திட்டம் விவரிக்கத் தவறிவிட்டது.

இப்படி அமெரிக்க வெளியுறவு அமைச்சு அறிவித்தது.

இச்சமாதானத் திட்டத்தை அங்கோலா அரசு சமர்ப்பித்திருந்தது. (எ)

## பாகிஸ்தானின் போக்கு பிராந்தியத்துக்கே ஆபத்து

### ஆப்கான் எச்சரிக்கை

ஜெனிவா, மார்ச் 17

ஆப்கான் பிரச்சினையில் பாகிஸ்தான் கொண்டுள்ள நிலைப்பாடு இப்பிராந்தியத்தின் பாதுகாப்புக்கே ஆபத்தாக முடியும்.

ஆப்கான் வெளியுறவு அமைச்சர் முகமது வாக்கல் முன்கண்டவாறு தெரிவித்தார்.

ஆப்கனில் இருந்து சோவியத் துருப்புக்களை விலக்கிக் கொள்வது சம்பந்தமான பேச்சுக்கள் எதிர்பார்க்கப்பட்டபடி நேற்று முடியவில்லை.

சோவியத் துருப்புக்களை விலக்கிக் கொள்வதற்கு முன்னர், ஆப்கனில் இடைக்கால அரசு அமைக்கப்பட வேண்டும் என்று பாகிஸ்தான் தொடர்ந்து வற்புறுத்தி வருகின்றது.

கடைசியாகக் கிடைத்த தகவலின்படி, ஆப்கான் சம்பந்தமான உடன்பாடு ஒன்றில் கைச்சாத்திடத் தயார்என்றும் ஆனால் சோவியத் துருப்புக்கள் விலக்கிக் கொள்ளப்படும் முன்னர் இடைக்கால அரசு அமைக்கப்பட வேண்டும் என்றும் பாகிஸ்தான் அரசு அறிவித்திருக்கின்றது.

# வாந்தி பேதி நோய் அறிகுறிகள்; அதனைத்தடுக்கும் வழிமுறைகள்

### எம். கே. முருகானந்தன் M.B.B.S (cey)

வாந்திபேதி நோய்க்கான அறிகுறிகள நோயைத் தடுக்கும் வழிகள பற்றி டாக்டர் எம். கே. முருகானந்தன் தெரிவிக்கும் தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

★ வாந்திபேதி மிகவும் எளிதாகவும், வேகமாகவும் பரவக் கூடிய ஓர் ஆபத்தான தொற்று நோயாகும்.

★ இது விபிரியோ கொலரா Vibrio (hoe-rae) என்ற நுண்கிருமியால் ஏற்படுகிறது நோயாளியின் மலத்திலிருக்கும் இக் கிருமி ஈயினாலோ அல்லது சுகாதாரக் கேடான வேறு முறைகளினாலோ உணவையோ, நீரையோ அசுத்தப்படுத்துவதன் மூலம் பரவுகிறது.

★ இந்நோயின் முக்கிய அறிகுறி திடீரென ஏற்படும் மிகக் கடுமையான வயிற்றுப்போக்கு ஆகும். ஏனைய வயிற்றோட்டம் அல்லது வயிற்றுளைவு போலல்லாது, கலரவின் வயிற்றுப் போக்குடன் வயிற்று நோவோ, வயிற்று வலியோ அல்லது வயிற்று முறுக்கோ இருக்க மாட்டாது. குழாயிலிருந்து நீர் பாய்வது போல் வயிற்றுப் போக்கு இருக்கும்.

★ இந் நோயின் மலம் தனித்தன்மை வாய்ந்தது. அரிசிக் கஞ்சித் தண்ணீர்' என்று பொதுவாக வர்ணிக்கப்படும் [illegible] அல்லது எச்சில் (Mucus) போன்ற சிறு சிறு துகள்கள் மிதக்கும்.

★ வயிற்றுப் போக்குடன் பொதுவாக வாந்தியும் ஏற்படும். சில வேளைகளில் காய்ச்சலும் ஏற்படலாம்.

★ வாந்திபேதியின் ஆபத்தான அம்சம், நோயாளிக்கு விரைவாக ஏற்படும் கடுமையான நீரிழப்பு (Dehydration) ஆகும்.

★ நீரிழப்பின் முக்கிய அறிகுறிகள்:— உலர்ந்த வாய், கடுமையான தண்ணீர் விடாய், குழி விழுந்த கண்கள், சுருக்கமடைந்து நெகிழுந் தன்மையை இழந்த தோல், சிறுநீர் வெளியேறும் அளவு மிகவும் குறைதல் — ஆகியவையாகும்.

★ இந்த அறிகுறிகள் தென்பட்ட உடனேயே, நோயாளியை வைத்திய [illegible] மிகவும் அவசியம்.

★ வைத்தியசாலைக்குப் போவதற்கிடையில் நீரிழப்பைத் தடுப்பதற்காக ஜீவனி (Jeevani) ரீஹைட்ரின் (Rehydrin) போன்ற மீளநீருடும் (Oral Rehydration solution) பானத்தைப் போதிய அளவு கொடுப்பது நன்மை பயக்கும்

ஆபத்தான இந் நோயைப் பரவவிடாது தடுப்பதே மிகவும் முக்கியமானது எனவே அசுத்தமடைந்த உணவையோ, நீரையோ உட்கொள்ளக் கூடாது.

★ நோய்பரவுதலைத் தடுக்க, தற்சுகாதார, உணவுச் சுகாதார, பொதுச் சுகாதார வழிமுறைகளை முறையாகக் கடைப்பிடிக்க வேண்டும்.

உதாரணமாக—

1. கொதிக்க வைத்து ஆறிய நீரையே உட்கொள்ளுங்கள்.

2. உணவுகளையும், பானங்களையும் ஈக்கள் அசுத்தம் செய்யாதவாறு மூடி வையுங்கள்

3. வீட்டிலேயே உணவருந்துங்கள்; பிற இடங்களில், பொதுவாக கடைகளிலும், தெரு ஓரங்களிலும் வைத்து விற்கும் உணவுகளைச் சாப்பிடுவதை நிறுத்துங்கள்

4. சமைக்க முன்னும், உணவுப் பண்டங்களைக் கையாள முன்பும், உணவு உட்கொள்ள முன்பும், மலசலம் கழித்த பின்னும் கைகளைச் சோப் போட்டு சுத்தமாகக் கழுவுங்கள்.

5. பொது இடங்களிலும், வெளி இடங்களிலும் மலசலம் கழிக்காதீர்கள். மலசல கூடங்களையே பயன்படுத்துங்கள். மலசல கூடத்தையும் சுத்தமாக வைத்திருங்கள்.

6. மலசல கூட வசதி இல்லாவிட்டால், மலத்தை உடனடியாக நிலத்தில் ஆழமாகப் புதைத்து விடுங்கள்.

7. குளம், கேணி, குட்டைகளில் குளிப்பதைத் தவிருங்கள்.

8. வாந்திபேதி நோயாளியைப் பராமரிப்பவர்கள், நோயாளியைக் கவனித்த பின்னும் அவரது மலவாளியைக் கையாண்ட பின்பும் உடலையும் கைகளையும் சுத்தமாகச் சோப் போட்டுக் கழுவுங்கள்.

### சமய சந்நிதிகளில்

## வசந்த நவராத்திரி

ஊர்காவற்றுறை புளியங்கூடல் செருத்தனைப் பகுதி ஸ்ரீ மகாமாரி அம்பாள் தேவஸ்தான வசந்த நவராத்திரி விழா நேற்று வியாழ கிழமை ஆரம்பமாகியது

இன்றுவெள்ளிக் கிழமை முதல் ஒன்பது தினங்களுக்கு இலட்சார்ச்சனை சண்டிகா ஹோமம் நவ ஆவரண பூசை ஆகியவை நடைபெறும்

எதிர் வரும் 26 ஆம் திகதி மகாசங்காபிசேகமும், திருக்குளிர்த்தியும் இடம்பெறும். [ 3-7]

## அலங்கார உற்சவம்

நல்லூர் பாணன்குளம் நாச்சி அம்பாள் ஆலய அலங்கார உற்சவம் எதிர் வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளது.

இதனைத் தொடர்ந்து பதினைந்து நாட்களுக்கு திருவிழாக்கள் நடைபெறவுள்ளன

கடைசித் திருவிழா அன்று கற்பூரச் சட்டி எடுக்க விரும்பும் அடியார்கள் தங்கள் பெயர்களை முன்னதாகப் பதிவு செய்து கொள்ளுமாறு பரிபாலன சபையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

### பொய்யாமொழி



குறள்:
இடிபுரிந்து எள்ளுஞ்சொல் கேட்பர் மடிபுரிந்து
மாண்ட உஞற்றி லவர்.

பொருள்:
சோம்பலை விரும்பி மேற்கொண்டு சிறந்த முயற்சி இல்லாதவராய் வாழ்கின்றவர், பிறர் இடித்துக்கூறி இகழ்கின்ற சொல்லைக் கேட்கும் நிலைமை அடைவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாப்பான வெண் சலவைக்கு
தேசிக்காய் வாசனையுடன்
NEW EMDEE SOAP
எம்டி சோப்
எம்டீ என்றபிறைசஸ். அச்சுவேலி.



# உதயன்

18 - 03 - 1988 வெள்ளிக்கிழமை



சிக்கன வெண் சலவைக்கு
தேசிக்காய் வாசனையுடன்
EMDEE BARSOAP
எம்டி பார் சோப்
எம்டீ என்றபிறைசஸ். அச்சுவேலி.



இன்று
மங்களகரமான
திறப்பு விழா

தரமான புதிய, பழைய
தமிழ், ஹிந்தி, ஆங்கில
வீடியோ படப் பிரதிகளை
யாழ். மக்களுக்கு
வழங்கவென உருவாகும்
புதியதோர் ஸ்தாபனம்



சிந்து
வீடியோ
விசன்

இன்று
(18-03 1988)
காலை 9.00
மணியளவில்
வரும் சுபவேளையில்
திறந்து வைக்கப்படும்.
அன்பர்கள், நண்பர்கள்,
ஆதரவாளர்கள் அனைவரையும்
கலந்துகொள்ளுமாறு
வேண்டுகிறோம்.

சிந்து வீடியோ விசன்
இல. 301, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

(1975)


## நன்றி செலுத்தும் ஆராதனை

### சுந்தரதேவராணி இரத்தினம்

அச்சுவேலியைச் சேர்ந்தவரும் கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் கடமையாற்றியவரும், B. J வசநதபாலன், B. S. வசந்தராஜன் ஆகியோரின் அன்புத் தாயருமான சுந்தரதேவராணி இரத்தினம் அவர்களது அஸ்தி சனிககிழமை 19-3 88) காலை 9-00 மணிக்கு அச்சுவேலி கிறீஸ்தவ சேமக்காலையில் அடக்கம் செய்யப்படும். இதைத்தொடர்ந்து அன்னரது இல்லத்தில் நடைபெறும் ஆராதனையில கலந்துகொள்ளுமாறு உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரையும் தாழ்மையுடன் அழைக்கின்றோம்.

இராஜ வீதி,
அச்சுவேலி (1982) பிள்ளைகள்

விமான குண்டுவைப்புச் சர்பவம்

## பூஸா தடுப்புக் கைதி அடிப்படைஉரிமைமீறல்வழக்கு

கொழும்பு, மார்ச் 18 கட்டுநாயக்காவில் ''திறீஸ்டார்'' விமானத்தில் நடைபெற்ற விமானக் குண்டுவெடிப் புச்சம்பவம்தொடர்பாக தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள பிரான்ஸிஸ் சந்திரசேகரானென்பவர் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்திருக்கிறார்

பூஸா இராணுவ முகாமில் தன்னைத் தடுத்துவைக்திருப்பது சட்ட விரோதமான செயல்என்று அவர்தனது மனுவில் கூறியிருக்கிறார்

''விமானம் குண்டுவைத்துத் தாக்சப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணை முடிவடைந்துவிட்டது. எனக்கு எதிரான சாட்சியங்கள் எவையும் விசாரணையில் வெளியாகவில்லை - இப்படி சந்திரசாகரா தனது மனுவில் கூறியிருக்கின்றார். (ஒ ஏ)

## தமிழர்களின்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

புதிய 150 பஸ்கள் இந்தியாவில் இருந்து நேரடியாக அனுப்பப்படும் என்றும்—

புனர்நிர்மாண வேலைகள் உடன் ஆரம்பிக்கப்பட இருப்பதாகவும்—

இந்நடவடிக்கைகளுக்கு இணைப்புக்குழு பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் இந்தியக் குழுவினர் கேட்டுக்கொண்டனர்.

அதற்குப் பதில் அளித்த இணைப்புக் குழுவினர் —

வடக்கு, கிழக்கு பகுதிகளில் புனர்நிர்மாண வேலைகளை செய்யக்கூடிய நிலைமை இன்னமும் ஏற்படவில்லை.

தமிழ்ப் பகுதிகளுக்கு தமிழர் நிர்வாகம் ஒன்று ஏற்படுத்தப்பட்டு அது செயல் உருப்பெற வேண்டும்.

இந்த நிலையை ஏற்படுத்த இந்தியா உதவ வேண்டும்.

அதன் பின்னர்தான் புனர்நிர்மாணம் புனர்வாழ்வு சம்பந்தமான வேலைகளை ஆரம்பிக்க வேண்டும்.

அதற்கு நாங்கள் பூரண ஒத்துழைப்புத்தர தயாராக இருக்கின்றோம் என்று தெரிவித்தனர். (ஒ-7)

## யாழ் அன்னை-

[1ம் பக்கத் தொடர்ச்சி]

மீண்டும் உண்ணாவிரதம் இருப்பதற்கான முடிவு மேற்கொள்ளப்படும் என்றும்— திருமதி தேம்பா குணநாயகம் மேலும் தெரிவித்தார். (ஒ-5)

## யாழ். நகர் - - - -

(1ம் பக்கத் தொடர்ச்சி

வழமையைப்போல ஓரளவு இயங்கின

பாடசாலைகள் முற்றாக நடைபெறவில்லை ஆயினும் அமைதிப்படையினரின் நடமாட்டமும குறைவாகவே காணப்பட்டது.

ஆனாலும் நகரை அண்டிய பகுதிகளில் ஒருசில கடைகள் ஒற்றைக் கதவில் திறந்து வியாபாரம் செய்வதைக் காணக்கூடியதாக இருந்தது. (இ-9-7-10)

## யாழ் மருத்துவ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரான்லி கல்பகே தன்னால் ஆன சகல உதவிகளையும் செய்வதாக உறுதிகூறியதாக இத்தூதுக் குழுவிற்கு தலைமை வகித்துச் சென்ற கோபி நல்லநாதன் உதயனுக்குத் தெரிவித்தார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் உள்ள வெற்றிடங்களை நிரப்பும் முகமாக போதனா வைத்தியசாலைகள் அமைச்சினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டும் அவற்றுக்கு போதியளவு விண்ணப்பங்கள் கிடைக்காமை குறிப்பிடத்தக்கது (அ-5)

## நமது நாடு ----

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அடையவில்லை? இவ்வளவு சுதந்திரம் வழங்கப்பட்டிருந்தும் நாட்டின் முன்னேற்றத்துக்குத் தடையாக இருப்பது என்ன?

நாம்விட்ட தவறுகளே இன்று எமது முன்னேற்றத்துகுத் தடையாக உள்ளன.

இப்படி ஜனாதிபதி ஜெயவர்த்தன சொன்னார். (ஒ-எ)

## கையொப்ப- - - -

[1ம் பக்கத் தொடர்ச்சி)

பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றும் வாய்ப்பினை இழக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

இதனால் பாதிப்புற்ற மாணவருக்குநிவாரணம் அளிக்கும் வகையில் உடனடியாக பரீட்சையை நடத்துவதற்கு அரசினை நிர்ப்பந்திக்கவேண்டியது மாணவர் கல்வி நலனில் அக்கறை உள்ளோர் அனைவரினதும் கடமை ஆகும், இதற்காக எம்மால் ஆரம்பிக்கப்பட்டுள்ள கையெழுத்துப் போராட்டத்துக்கு அனைத்து மாணவர்கள், ஆசிரியர்கள் பெற்றோர்கள், சமுதாய நலன் விரும்பிகள் அனைவரும் முழுமையான ஆதரவினை வழங்கி க. பொ. த [சா/தர] பரீட்சை நடைபெறுவதற்கு ஒத்துழைக்குமாறு வேண்டுகின்றோம். [ஒ]

## ஐந்தாம் மாத நினைவஞ்சலியும் தோஸ்திர ஆராதனையும்



### சாமுவேல் நவரத்தினம் கதிரேசு

மலர்வு: 05 - 01 - 1928 உதிர்வு: 20 - 10 - 1987

20 - 10 - 1987 அன்று அகால மரணமடைந்த உரும்பராய் கிழக்கைச் சேர்ந்த சாமுவேல் நவரத்தினம் கதிரேசு அவர்களின் வாழ்க்கைக்கு நன்றி செலுத்தும் முகமாக உரும்பராய் பரிசுத்த இம்மானுவேல் தேவாலயத்தில் நாளை சனிக்கிழமை 19 - 0 3 - 88 அன்று காலை 8-30 மணி அளவில் தோஸ்திர ஆராதனை நடைபெறும். தயவுசெய்து உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும தவறாது சமுகம் தந்து அவரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்

அன்னாரின் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்

## நீத்தார் பட்டியல்

### யோண்பிள்ளை பிளொசம் (மேரிறோஸ்)

அன்னார் 16-03-1988 புதன்கிழமை இரவு காலமானார். இவர் மடுததீன் யோண்பிள்ளையின் அன்பு மனைவியும், கலா, நீலா, உயிலா, யோண்சன், றொபேட், எட்வேட் ஆகியோரின் அருமைத் தாயாரும், திரவியம், வேவி இராசேஸ், சந்திரன் ஆகியோரது அன்புச் சகோதரியும் ஆவார்.

நல்லடக்கம பரி. கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் 17-03-1988 வியாழக்கிழமை பி. ப. 3 30 மணிக்கு நடைபெற்றது. உற்றார், உறவினர், அன்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: கிறிஸ்தோப்பர் - ரவி,
42/6, மவுண்கார்மல் வீதி,
குருநகர், யாழ்ப்பாணம். (2076)

## நீத்தார் பட்டியல்

### திரு. வைத்தியநாதர் கனகராஜா
(சங்கானை)

(Retired Staff Officer Chief Accountant's Office Malayan Railways, Kuala Lumpur Malasia)

சண்டிலிப்பாய் வைத்தியநாதர் தம்பதிகளின் புத்திரனும் சங்கானை கிழக்கைச் சேர்ந்த மலாயன் பென்ஷனியருமாகிய திரு கனகராஜா அவர்கள் 17- 3- 88 வியாழக்கிழமை சிவபதமெய்தினார். அன்னார் சிவலக்ஷ்மியின் அன்புக் கணவரும், சிவராஜ் ('ஜானலக்ஷ்மி ஸ்பின்னிங் அன் வீவிங் மில்ஸ்' முன்னாள் முகாமையாளரும், 'வைற்பீல்ட் இண்டஸ்றீஸ்' உரிமையாளரும்), சந்திரராஜ் (கணக்காளர் U S.A.) அவர்களின் அன்புத் தந்தையும், சசிதேவி, சிவரங்கனி ஆகியோரின் மாமனாரும் உஷா — ரவிச்செல்வன், சுமதி, ஷாமிறை, வினித்கா, காயத்திரி, கிரிஷா ஆகியோரின் பேரனும், பிரணவனின் பூட்டனும் காலம் சென்ற திருமதி A வைத்தியலிங்கம், திருமதி S. தம்பு, திருமதி L. அப்புப்பிள்ளை. திரு. V செல்லத்துரை. திரு V இரத்தினம் அவர்களினதும் மலேசியாவில் வசிக்கும் திருமதி பாக்கியம் வீரசோமசுந்தரம் அவர்களின் சகோதரனும் காலம் சென்ற A. K. அழகசுந்தரத்தினதும், A K நேசரட்ணம் (U. S. A), திருமதி R. செல்லையா (Madras) அவர்களினது மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 18 – 03 - 1988 வெள்ளிக்கிழமை காலை 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக கரச்சி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. சிவராஜ்

''யோகமாளிகை''
வல்லை வீதி,
சங்கானை.

(1983)

### டாக்டர் திருமதி மாகிறெற் துரையப்பா, B. A. (Lon )

முன்னைநாள் இளவாலை கன்னியர்மடப் பாடசாலை உப அதிபரும், பண்டத்தரிப்பு ஹோமியோபதி வைத்தியருமாகிய டாக்டர் திருமதி மாகிறெற் துரையப்பா 17 - 3 - 88 வியாழக்கிழமை காலமானார். அன்னார் A. V. துரையப்பாவின் அன்பு மனைவியும், திருமதி புஷ்பா தம்பிராசா. A. B. துரையப்பா (லங்கா சிமெந்து லிமிட்டெட்), சித்ரா, இந்திரா, ரவிச்சந்திரன், செல்வச்சந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாருமாவார். நல்லடக்கம் 19-3-88 சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பண்டத்தரிப்பு கத்தோலிக்க சேமக்காலையில் நடைபெறும்.

தகவல் : A. V. துரையப்பா

(2078)


சங்கானை லீலா பேக் ஹவுஸ் 4 ஆவது ஆண்டு நிறைவு

இன்று நான்காவது ஆண்டு நிறைவு



சோதனைகள் பல கண்டோம்
வேதனைகளுடன் கழித்தோம்
நாம் நினைந்தபடி
சாதனைகள் செய்ய முடியவில்லை
இந்நிலையிலும்
எமது உற்பத்திகளுக்கு நிங்கள் தரும்
ஆதரவு மனநிறைவைத் தருகிறது
உங்கள் பேராதரவுக்கு
எமது மனம் கனிந்த நன்றி

தரமான
உள்ளூர்
உற்பத்திகளுக்கு
ஆதரவு தாரீர்!

AUM
LEELAA BAKE HOUSE
லீலா பேக் ஹவுஸ்

மார்க்கட் சதுக்கம், சங்கானை.



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்டாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2. இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 18-03-1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd. 292/2 NavalarRoad, Jaffna on Friday, 18th March 1988.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org